

நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க.சார்பில் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி ஏற்பாட்டில் கங்கைகொண்டானில் மாபெரும் பொதுக்கூட்டம் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன்,தினேஷ்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன்,மாவட்ட துணைச் செயலாளர் தர்மன்,மாவட்ட முன்னாள் துணை செயலாளர் ஆ.க.மணி,மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், மாரியப்பன்,தஞ்சை பகுதி பொறுப்பாளர் பூ.சுப்பிரமணியன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.





கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலை இல்லா மிதிவண்டிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் மங்களூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பா. செங்குட்டுவன் உள்ளார்.

### வேலூரில் வசதி குறைந்த இ.எஸ்.ஐ. மருத்துவமனையே உள்ளது!

# தோல் தொழில்துறை மையமான ஆம்பூரில் மருத்துவமனை இல்லாத சுகாதார அநீதி!

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் ஒத்திவைப்பு தீர்மானம்!

புதுடெல்லி, டிச. 11 -

வேலூர்-ஆம்பூர் ESIC மருத்துவமனைகள் கட்டப்படாமல் ஒன்றிய அரசால் புறக்கணிக்கப் பட்டதை கண்டித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.



மக்களவையில் வேலூர் மற்றும் ஆம்பூர் தொழில் துறை பகுதிகளில் உள்ள லட்சக்கணக்கான ESIC பயனாளிகள் எதிர்கொள்ளும் கடுமையான சுகாதார நெருக்கடியை நாடு முழுவதும் அவர் முன்வைத்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் வேலூர் மாவட்டத்தில் ESIC பயனாளிகளின் எண்ணிக்கை இரட்டை அளவைத் தாண்டி உயர்ந்துள்ள போதிலும், வேலூரில் உள்ள ESIC மருத்துவமனை வழங்கும் வசதிகள் மிகவும் குறைவாக, தொழிலாளர் மருத்துவ வசதிக்கு போதுமானதாக இல்லை.

பல்துறை நிபுணர் சிகிச்சை, ICU, 24×7 அவசர சிகிச்சை, நவீன பரிசோதனை கருவிகள் போன்ற அத்தியாவசிய மருத்துவ வசதிகள் இல்லாத காரணத்தால் தொழிலாளர்கள் சென்னை அல்லது பெங்களூரு சென்று சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆம்பூர், உலகப் புகழ் பெற்ற தோல் தொழில் துறை மையமாக இருந்தும், இன்னும் முழுமையான ESIC மருத்துவமனை அமைக்கப்படாதது மிகப் பெரிய சுகாதார அநீதியாக உள்ளது.

இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசின் செயலற்ற போக்கு கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

“தொழிலாளர்கள் மாதந்தோறும் ESICக்கு பணம் செலுத்துகிறார்கள். ஆனால், பதிலுக்கு அவர்கள் பெறுவது தாமதம், அலட்சியம், மரியாதையற்ற மருத்துவ வசதிகள்.

இது தொழிலாளர் சமூகம் மீது மிகப்பெரிய அநீதி,” “வேலூர் ESIC மருத்துவமனை இப்போது அதிகபட்ச சுமையைத் தாங்க முடியாத நிலையில் உள்ளது. ஆம்பூரின் தொழிலாளர் சமூகத்துக்கு அவர்கள் உரிமையாய்த் கிடைக்க வேண்டிய மருத்துவமனை இன்னும் ஒப்புதல் பெறாதது மிகவும் வருத்தமானது.”

மனுவின் மூலம் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகள்

1. வேலூர் ESIC மருத்துவமனையை உடனடியாக பல்துறை நிபுணர் (MultiSuper Speciality) நிலையமாக மேம்படுத்துதல்.

2. ஆம்பூரில் முழுமையான ESIC மருத்துவமனை அமைக்க மத்திய அரசின் விரைவான ஒப்புதல்.

3. காலக்கெடு நிர்ணயித்த செயல்திட்டத்தை மத்திய அரசு வெளியிடுதல்.

4. மாவட்ட ஆட்சியர் மற்றும் உள்ளூர் எம்பி இணைந்து செயல்படும் உயர் மட்ட ஆய்வு குழுவை அனுப்புதல்.

தொழிலாளர் நலனுக்கான தொடர் உறுதி

“வேலூர் - ஆம்பூர் தொழிலாளர்கள் தமிழ்நாட்டின் தொழில் துறை முதுகெலும்பாக விளங்குகிறது.

அவர்களின் ஆரோக்கியத்தை புறக்கணிக்க முடியாது. அவர்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் கிடைக்கும் வரை நான் இந்த பிரச்சினையை தீவிரமாகத் தொடர்ந்து முன்வைப்பேன்,” இவ்வாறு டி.எம். கதிர் ஆனந்த் உறுதியளித்தார்.



தூத்துக்குடி மாவட்டம், புதூர் ஊராட்சி ஒன்றியம், வெம்பூர், அயன்கரிசல்குளம், மாவில்பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளில் 363 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் செயல்படும் விதம் குறித்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் புதூர் வட்டார வளர்ச்சி அலுவலர் தினகரன், புதூர் ஒன்றிய செயலாளர்கள் மும்மூர்த்தி, ராதாகிருஷ்ணன், செல்வராஜ், இம்மானுவேல் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ்பாண்டியன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் அழகுராஜ், ஒன்றிய அவைத் தலைவர் பொன்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் லட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### போலி மருந்து விவகாரத்தில்

# புதுச்சேரி அரசைக் கண்டித்து சட்டமன்ற முற்றுகைப் போராட்டம்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா உள்ளிட்ட 500 பேர் கைது!

புதுச்சேரி, டிச. 11 –

போலி மருந்து விவகாரத்தில் அலட்சியாக செயல்படும் புதுச்சேரி அரசை கண்டித்து, சட்டமன்ற முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.



போலி மருந்துகளின் கேந்திரமாக புதுச்சேரியை மாற்றிய மக்கள் விரோத பாஜக–என்.ஆர்.காங்கிரஸ் அரசை கண்டித்தும், மக்களின் உயிரோடு விளையாடிய குற்றவாளிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், சட்டமன்ற முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

தி.மு.க. மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையிலும், அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப்பாளர் வி. அனிபால்கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையிலும் திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் காமராஜர் சிலை அருகில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு நேரு வீதி வழியாக சட்டமன்றம் நோக்கி சென்றனர்.

அப்போது, போலி மருந்து விவகாரத்தில் தொடர்புடையவர்களை கைது செய்ய வலியுறுத்தி கையில் பதாகைகள் ஏந்தியும், கோஷம் எழுப்பியும் சென்றவர்களை சம்பா கோவில் எதிரில் போலீசார் தடுப்புகள் அமைத்து தடுத்து நிறுத்தினர்.

தொடர்ந்து போலீசாரின் தடுப்புகளை மீறி சட்டமன்றத்தை முற்றுகையிட முயன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத் மற்றும் திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் 500–க்கும் மேற்பட்டோர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த முற்றுகைப் போராட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூர்த்தி, நந்தா. சரவணன், மாநில துணை அமைப்பாளர்கள் குமார், தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், லோகையன், ஆறுமுகம், காந்தி, அருட்செல்வி, தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் நித்திஷ், பசுபிக் சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், ராமசாமி, செல்வநாதன், பிரபாகரன், சக்தி வேல், தங்கவேலு, வேலவன், சண்முகம், தர்மராஜன், கோகுல், ரவீந்திரன், செந்தில்வேலன், இளம் பரிதி, பழநி, செந்தில்குமார், கோபாலகிருஷ்ணன், அமுதாகுமார், நர்கீஸ், தொகுதி செயலா ளர்கள் சக்திவேல், சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், நடராஜன், சவுரிராஜன், மணிகண்டன், சக்திவேல், தியாக ராஜன், சிவக்குமார், ஆறுமுகம், வடிவேல், மோகன், ரவிச்சந்திரன், சக்திவேல், ராஜாராமன், பார்த்திபன், இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், ராதாகிருஷ்ணன், கலைவாணன், சத்தியவேலு,

அணிகளின் அமைப்பாளர்கள் அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி பரிமளம், தகவல் தொழில்நுட்ப அணி தமிழசரன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி குலசேகரன், இலக்கிய அணி மோகன்தாசு, மீனவர் அணி கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு ஆறுமுகம், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சங்கர் (எ) சிவசங்கரன், பொறியாளர் அணி அருண்குமார், நெசவாளர் அணி செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ரவிச்சந்திரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி ஆனந்த் ஆரோக்கியராஜ், சுற்றுச்சூழல் அணி முகிலன், அயலக அணி ஷாஜகான், அணித் தலைவர்கள் நெசவாளர் அணி மதி (எ) சுப்புராயன், தொமுச அங்காளன்,


மகளிர் அணி சந்திரகலா, மகளிர் தொண்டர் அணி சத்தியா, விவசாய அணி பாஸ்கர் (எ) ஆனந்தன், விவசாய தொழிலாளர் அணி நாவப்பன், ஆதிதிராவிட நலக்குழு பழனிசாமி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை புலவர் கிருஷ்ணமூர்த்தி, இலக்கிய அணி கலைமாமணி ராஜா, வர்த்தகர் அணி செல்வமுத்துகுமார விநாயகம், சுற்றுச்சூழல் அணி பன்னீர்செல்வம், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஸ்ரீதர், துணைத் தலைவர்கள் வர்த்தகர் அணி குரு (எ) சண்முகசுந்தரம், மகளிர் அணி பிரியதர்ஷினி, மகளிர் தொண்டர் அணி விஜயலட்சுமி, விவசாய அணி செல்வராசு, விவசாய தொழிலாளர் அணி மதிவாணன், ஆதிதிராவிட நலக்குழ கதிரவன், மீனவர் அணி குமணன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ராஜேஷ் (எ) சேவியர் ராஜேஷ், இலக்கிய அணி பாண்டியன், வழக்கறிஞர் அணி தாமோதரன், ராமகிருஷ்ணன் மற்றும் அணிகளின் துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 500–க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஆர்.எஸ். ராஜாக்கனி

### டிசம்பர் 11 (2009)



முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து விருதுநகர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

விருதுநகர் கூட்டுறவு வங்கித் தலைவராகப் பணியாற்றியவர்.

1986ல் மொழிப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ இருபத்தோரு முறை சிறை சென்றவர்.

“சிறைக்கும், சித்திரவதைக்கும் அஞ்சாத என் தம்பி ராஜாக்கனி” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப மாநில துணைச் செயலாளராக திரு.**எம்.ராஜராஜன்** (218, சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் நாமக்கல் மாவட்டம் ) அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை, – 600 018.
நாள் : 10.12.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காவனூர் மா.தாமோதரன்

### டிசம்பர் 11 (2015)



பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கிளைச் செயலாளர், சித்தாமூர் ஒன்றியச் செயலாளர், மாவட்ட அணிகளின் அமைப்பாளராகப் பணியாற்றியவர்.

சூணாம்பேடு ஊராட்சி மன்றத் தலைவராக இரண்டு முறையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு, சட்ட நகல் எரிப்பு, விலைவாசி உயர்வு, இலங்கைத் தமிழர் ஆதரவு உள்ளிட்ட பல போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ பத்து முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.